சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

வாரம் : 04

தரம்: 7

தயாரித்தவர்: செல்வி P. கமலாமாலினி
இராசகல தமிழ் வித்தியாலயம்

**பாட இலக்கம் : 18**
**தலைப்பு : பிள்ளை அழுத கண்ணீர்**

**01. இடைவெளி நிரப்புக.**

1. பிள்ளை அழுத கண்ணீர் எனும் நாடகத்தின் ஆசிரியர் ............................. ஆவார்.
2. பிள்ளைக்கு வைத்த பாலை ................................... குடித்துவிட்டது.
3. எலி.................................. புல் கேட்டது.
4. குளத்தை திருத்தித் தந்தவர் ...................................... ஆவார்
5. ஆக்கினை என்பது ................................ என பொருள்படும்.

**02. பொருத்தமான இணைப்பிடைச் சொல்லை தெரிவு செய்க.**

1. .அ. நான் கோயிலுக்குச் சென்றேன். ஆ. யுகி கோயிலுக்குச் சென்றாள்.
   1. எனவே 2. உம் 3. அத்தோடு 4. அதனால்
2. அ. சாரா கறுப்பு நிறமானவள் ஆ. சாரா அழகானவள்
   1. எனவே 2. ஆகவே 3. ஆகையால் 4. ஆனால்
3. அ. நான் ஆடுவேன் ஆ. நான் பாடுவேன்.
   1. அல்லது 2. ஆகவே 3. இருப்பினும் 4. ஆனால்
4. அ. யுகன் அழகாக வரைந்தான். ஆ. யுகன் முதலிடம் பெறவில்லை.
   1. எனவே 2. அதனால் 3. இருப்பினும் 4. அத்துடன்
5. அ. நேற்று நான் பாடசாலைக்கு செல்லவில்லை. ஆ. எனக்கு தலைவலி.
   1. அதனால் 2. ஏனென்றால் 3. ஆதலால் 4. உம்

**03. கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. குளக்கட்டைத் திருத்துவதற்கு கொத்தனார் என்ன பொருள் கேட்டார்?

2. எலியின் யோசனையைக் குழப்பும்படி யார் யார் சத்தமிட்டார்கள்?

3. மரங்களை எல்லாம் எத்தேவைகளுக்காக தறித்துக் கொண்டு போனார்கள் என்று மலை ஒன்று எலியிடம் கூறுகிறது?

4. ஆடக்கா, எலியிடம் ஒரு குவளை கொண்டு வரச் சொன்னது எதற்காக?

5. முத்தமிழும் எவை?

6. இணைப்பிடைச் சொற்கள் என்றால் என்ன?